# "இந்தி ஒழிய வேண்டும் அல்லது நான் ஒழிய வேண்டும்"

## 'இனி 10 நாளில் சாவேன்'

—:o:—

## தோழர் ஸ்டாலின் ஜகதீசன் உறுதி.

(நமது நிருபர்)

சென்னை, மே 29

இன்று காலை 8 மணிக்கு தோழர் ஸ்டாலின் ஜெகதீசன் அவர்களைக் கண்டு பேசினேன். திருச்சிக் கூட்டத்தின் முடிவை அறிய ஆவலோடு காத்துக் கொண்டிருந்தவர் முடிவு தெரிந்தவுடன் மிக ஈன குரலில் புன்சிரிப்போடு "ஹிந்தி ஒழிய வேண்டும், அல்லது நான் ஒழிய வேண்டும்" என்று சொன்னார். "ஏன் இவ்வளவு பிடிவாதமாய் இருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "இந்த விஷயத்தில் மட்டும் நான் எவருடைய மறுப்பையும் கேட்கத் தயாராயில்லை" என்றுகூறிவிட்டுக் களைப்போடு படுத்துக்கொண்டார்.

அவருடைய உடல் மிகத் தளர்ந்து விட்டது. கன்னங்களில் குழி விழுந்து விட்டது. எழுந்து நின்றால் கால் கைகள் நடுங்குகின்றன. சட்டையை எடுத்தால் எலும்பும் தோலுமாய்த் தோன்றுகிறார் சாதாரணமாய் 135 பவுண்ட் இருந்தார். 14-5-38-ல் 106 பவுண்ட் தான் இருந்தார். இன்று (29-5-38)ல் நிறுத்துப் பார்த்ததில் 95 பவுண்ட் தானிருக்கிறார். அதிக மயக்கமாக இருக்கிறதாம். அதிகமானால் இன்னும் 10 நாட்களுக்கு மேல் உயிர் நிற்காது என்று கூறுகிறார்.

"நீங்கள் உயிர் நீத்துவிட்டால் பிறகு என்ன செய்யவேண்டும்?" என்றுகேட்டேன். "என்னவேண்டுமானாலும் செய்யுங்கள்; என் சம்மந்தப்பட்டவரையில் நான் இறந்தவுடன் பிணத்தை முதன்மந்திரி வீட்டுக்கு முன் வேண்டுமானாலும் எறிந்துவிட்டுப் போங்கள்," என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

தினந்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எவரும் பேசுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

---

## தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்கள் இன்று (30-5-38) 30-ம் நாள் பட்டினி.

—:(✻):—

(மற்றொரு செய்தி)

தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்கள் இப்பொழுது அதிக பலயீனம் அடைந்திருக்கிறார். இளைப்பு அதிகமாக இருக்கிறது. முக்கியமாகக் காலை வேலைகளில் களைப்பு அதிகமாக இருக்கிறபடியால் பேசுவதும் கிடையாது. மாலை வேளைகளில் சற்றுக் களைப்புக்குறைந்திருக்கிறது. ஆனாலும் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டங்களுக்குத் தவறாமல் போய் வருகிறார். ஆனால், வாய்திறந்து பேச முடிகிறதில்லை. தாம் சொல்ல விரும்புகிற கருத்தை எழுதிக் கொடுத்துப் படிக்க செய்கிறார். ஊக்கமும் மன எழுச்சியும் முன்னைவிட அதிகமாகக் காணப்படுகிறது முஸ்லிம்களும் ஆதிதிராவிடர்களும் ஏனைய நண்பர்களும் வந்து தரிசித்துச் செல்கிறார்கள். சென்னையில் ஸ்டாலின் அவர்களின் உண்ணாநோன்பு, உணர்ச்சியையும் பரபரப்பையும் ஊக்கத்தையும் உண்டாக்கியிருக்கிறது. தூக்கம் இல்லை. அவர் நிலைமை நண்பர்களுக்குக் கவலையை உண்டாக்கிவருகிறது